தினமணி

**வேளாண் பல்கலை. வேலைவாய்ப்பு வழிகாட்டல்**

First Published : 17 Mar 2010 01:08:10 AM IST
Last Updated : 17 Mar 2010 08:46:20 AM IST

கோவை, மார்ச் 16: கோவை வேளாண் பல்கலை.யில் 2010}ம் ஆண்டுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் முகாம் மார்ச் 14ம் தேதி வரை மாணவர் நல இயக்குநரகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் பல்கலை. துணைவேந்தர் ப.முருகேச பூபதி பேசியது:

மாணவர்கள் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் மாணவர் நல இயக்குநரகம் நிறைவேற்றி வருகிறது.

வேளாண் பல்கலை. பட்டதாரிகளுக்கு அதிக வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன. குறிப்பாக, இந்திய ஆட்சிப் பணிகளில் வேளாண் பட்டதாரி மாணவர்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் வேளாண் பல்கலை. மாணவர்கள் 80 பேர் மேற்படிப்பைத் தொடர்ந்துள்ளனர். 37 மாணவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருகின்றனர் என்றார்.

மாணவர் நல இயக்குநர் த.ராதாகிருஷ்ணன் பேசியது:

தொடர்ந்து 5 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் முகாம் மூலம் ஆயிரத்து 452 மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு மாணவர்களின் தகுதியையும், தகவல் பரிமாற்றத் திறனையும் மேம்படுத்த மாணவர் நல இயக்குநரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

இந் நிகழ்ச்சியில், சர்க்கரை ஆலைகள், வேளாண் இடுபொருள் நிறுவனங்கள், எச்டிஎப்சி வங்கி, வேளாண் அறிவியல் நிலையங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் உள்பட மொத்தம் 24 முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டன.

உள்நாடு, அயல்நாடுகளில் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், சுயதொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள், நேர்முகத் தேர்வு, குழு கலந்துரையாடல் முறையில் மாணவர்கள் பின்பற்றிய வேண்டிய வழிமுறைகள் பற்றி அந்தந்தத் துறைகளில் தனித்துவம் பெற்றவர்களைக் கொண்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்லூரிகளையும் சார்ந்த 472 இளங்கலை மற்றும் முதுகலை மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இதில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், உயிர்தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த 287 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவற்றில் 93 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.1.5 லட்சம் நிர்ணயிக்கப்பட்டது.

மண்டல பாஸ்போர்ட் அதிகாரி பி.பாலமுருகன், வனவியல் பயிற்சி கல்லூரி முதல்வரும், முதன்மை வனப் பாதுகாவலருமான ஜோஸ் டி.மாத்யூ, வேளாண் பல்கலை. பேராசிரியர் கே.எஸ்.சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் பல்கலை. வேலைவாய்ப்பு வழிகாட்டல்**

First Published : 17 Mar 2010 01:08:10 AM IST

Last Updated : 17 Mar 2010 08:46:20 AM IST

கோவை, மார்ச் 16: கோவை வேளாண் பல்கலை.யில் 2010}ம் ஆண்டுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் முகாம் மார்ச் 14}ம் தேதி வரை மாணவர் நல இயக்குநரகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் பல்கலை. துணைவேந்தர் ப.முருகேச பூபதி பேசியது:

மாணவர்கள் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் மாணவர் நல இயக்குநரகம் நிறைவேற்றி வருகிறது.

வேளாண் பல்கலை. பட்டதாரிகளுக்கு அதிக வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன. குறிப்பாக, இந்திய ஆட்சிப் பணிகளில் வேளாண் பட்டதாரி மாணவர்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் வேளாண் பல்கலை. மாணவர்கள் 80 பேர் மேற்படிப்பைத் தொடர்ந்துள்ளனர். 37 மாணவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருகின்றனர் என்றார்.

மாணவர் நல இயக்குநர் த.ராதாகிருஷ்ணன் பேசியது:

தொடர்ந்து 5 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் முகாம் மூலம் ஆயிரத்து 452 மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு மாணவர்களின் தகுதியையும், தகவல் பரிமாற்றத் திறனையும் மேம்படுத்த மாணவர் நல இயக்குநரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

இந் நிகழ்ச்சியில், சர்க்கரை ஆலைகள், வேளாண் இடுபொருள் நிறுவனங்கள், எச்டிஎப்சி வங்கி, வேளாண் அறிவியல் நிலையங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் உள்பட மொத்தம் 24 முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டன.

உள்நாடு, அயல்நாடுகளில் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், சுயதொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள், நேர்முகத் தேர்வு, குழு கலந்துரையாடல் முறையில் மாணவர்கள் பின்பற்றிய வேண்டிய வழிமுறைகள் பற்றி அந்தந்தத் துறைகளில் தனித்துவம் பெற்றவர்களைக் கொண்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்லூரிகளையும் சார்ந்த 472 இளங்கலை மற்றும் முதுகலை மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இதில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், உயிர்தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த 287 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவற்றில் 93 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.1.5 லட்சம் நிர்ணயிக்கப்பட்டது.

மண்டல பாஸ்போர்ட் அதிகாரி பி.பாலமுருகன், வனவியல் பயிற்சி கல்லூரி முதல்வரும், முதன்மை வனப் பாதுகாவலருமான ஜோஸ் டி.மாத்யூ, வேளாண் பல்கலை. பேராசிரியர் கே.எஸ்.சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நீலகிரி மாவட்ட தேயிலை ஆலைகளுக்கு விருது**

First Published : 17 Mar 2010 12:58:26 AM IST

Last Updated : 17 Mar 2010 08:47:39 AM IST

உதகை, மார்ச் 16: கோல்டன் லீப் இந்தியா விருதுக்காக நடத்தப்பட்ட போட்டியில் நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த தேயிலை தொழிற்சாலைகள் பல்வேறு விருதுகளை பெற்றுள்ளன.

தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளின் தரத்தை உலகத் தரத்துக்கு இணையாக உயர்த்தவும், உலக சந்தையில் தென் மாநில தேயிலைக்கு கிராக்கியை அதிகரிக்கவும் தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் மற்றும் தேயிலை வாரியம் ஆகியவற்றின் சார்பில் கோல்டன் லீப் இந்தியா விருதுக்கான போட்டி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

இப்போட்டியில் பங்கேற்று உலகத்தரம் வாய்ந்த தேயிலைத் தூளை உற்பத்தி செய்துள்ள தொழிற்சாலைகளுக்கு கோல்டன் லீப் இந்தியா விருது வழங்கப்படுகிறது. தொடர்ந்து 6வது ஆண்டாக இப்போட்டிகள் கடந்த மாதம் 22ம் தேதி குன்னூரிலுள்ள உபாசி அரங்கில் தொடங்கப்பட்டது. பெரிய கம்பெனி எஸ்டேட்டுகள், சிறு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்பட 100 தொழிற்சாலைகள் 182 வகைகளிலான தேயிலைத்தூளை இந்த போட்டிக்கு அனுப்பியிருந்தன.

இப்போட்டிகளில் சிடிசி, இலை ரகம், டஸ்ட் ரகம், ஆர்த்தோடக்ஸ் மற்றும் மூலிகை ரக தேயிலைத்தூளுக்கு என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டன.

÷உபாசியில் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் மும்பை, கொல்கத்தா, கொச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 8 தேயிலை நிபுணர்கள் கொண்ட குழு சிறந்த தேயி்லைத் தூளை தெரிவு செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இவர்கள் போட்டியில் பங்கேற்ற தேயிலைத்தூளின் தரம், மணம் மற்றும் சுவையை அறிந்து அதற்கேற்ற வகையில் மதிப்பெண்களை வழங்கினர்.

இதில் தேர்வு செய்யப்பட்ட 60 வகை தேயிலைத்தூள் கடந்த 9ம்தேதி துபாய் குளோபல் தேயிலை மையத்தில் நடத்தப்பட்ட இறுதி சுற்றுப் போட்டிகளில் பங்கேற்றன.

இப்போட்டியின் நடுவர்களாக சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த குரூஸ் பரூச்சா, ரிச்சர்டு ஸ்மித், மோசின் ஷபி, பாமி டிப், ஷான் கப் ஆகியோர் செயல்பட்டனர்.

பெரிய கம்பெனி எஸ்டேட்டுகளுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியில் கேரளாவிலுள்ள கண்ணன் தேவன் டீ, ஹாரிசன் மலையாளம், மலங்கரா, கர்நாடகத்திலுள்ள ஜூஃன்க்டோலி, ஹெய்லி பியூரா, சென்னையிலுள்ள ரவுஸ்டன் முல்லை, பாம்பே பர்மா நிறுவனம், நீலகிரியிலுள்ள குன்னூர் தேயிலை எஸ்டேட், யுனைடெட் நீலகிரி மற்றும் வாட்டர்பால் எஸ்டேட்டுகள் விருதுகளை தட்டிச் சென்றன.

அதேபோல, கோத்தகிரியிலுள்ள விக்னேஷ்வர் சிறு தேயிலை தொழிற்சாலை சிடிசி ரகத்தில் டஸ்ட், லீப் மற்றும் பேனிங்க்ஸ் ஆகிய 3 பிரிவுகளிலும் விருதுகளை தட்டிச் சென்றது.

அரவேணுவிலுள்ள தர்மோனா தேயிலை தொழிற்சாலை இரு விருதுகளை பெற்றது.

வெற்றி பெற்ற தேயிலை தொழிற்சாலை உரிமையாலர்களுக்கு கடந்த 10ம் தேதி துபாயில் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் இந்திய தேயிலை வாரிய தலைவர் பாசுதேவ் பானர்ஜி விருது மற்றும் பரிசுகளை வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை கோல்டன் லீப் இந்தியா விருது கமிட்டி அமைப்பாளர் தேவராஜ் தலைமையிலான குழுவினர் செய்திருந்தனர்.

தென்னிந்திய தேயி்லைத் தூளுக்கு உலகளவில் அங்கீகாரத்தை ஏற்படுத்தி கொடுப்பதற்காக நடத்தப்படும் இப்போட்டியில் கடந்த முறை நீலகிரியிலுள்ள சில கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ தேயிலை தொழிற்சாலைகள் பங்கேற்றதோடு பரிசுகளையும் பெற்றிருந்தன.

இதன் மூலம் டான்டீ மற்றும் இண்கோசர்வ் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் தேயிலைத்தூளின் தரம் உலக சந்தையின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

ஆனால், இவ்வாண்டில் இவ்விரண்டு நிறுவனங்களும் இப்போட்டிகளில் பங்கேற்காதது போட்டி அமைப்பாளர்களுக்கு அதிர்ச்சியையே ஏற்படுத்தியது.

**விவசாயத்தை மேம்படுத்த அறிவியல் தொழில் நுட்பம்**

First Published : 17 Mar 2010 01:02:26 AM IST

உதகை, மார்ச் 16: விவசாயத் தொழிலை மேம்படுத்துவதற்காக அறிவியல் தொழில் நுட்ப உதவிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென குன்னூரில் நடைபெற்ற நீலகிரி விவசாயிகள் விழாவில் வலியுறுத்தப்பட்டது.

உபாசி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் தேயிலை வாரியத்தின் சார்பில் நீலகிரி விவசாயிகள் விழா குன்னூர் உபாசி அரங்கில் திங்கள்கிழமை தொடங்கியது. இம்மாதம் 19-ம் தேதி வரை நடைபெறவுள்ள இவ்விழாவில் தொழில் நுட்ப வாரம் என்ற பெயரில் விவசாயத் தொழில் நுட்பங்கள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

இம்முகாம் தொடக்க விழாவில் தமிழக கதர்வாரியத் துறை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் பங்கேற்றார்.

அவர் பேசியதாவது: அறிவியல் தொழில் நுட்பத்தின் உதவியை விவசாயிகள் பெற வேண்டும். தேயிலையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம்தான், விலையை தக்க வைத்துக் கொள்ள முடியும் என குறிப்பிட்டார்.

தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.டி.நசீம் பேசியது:

2005-ம் ஆண்டில் சிறு தேயிலை விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.3.40 மட்டும் கிடைத்தது. ஆனால், தரம் குறித்த விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தியதால் தற்போது பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.15க்கு மேல் விலை கிடைக்கிறது. கடந்த வாரத்தில் டி.மணியட்டி பகுதியிலுள்ள ஈஸ்வரா மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கிலோவுக்கு ரூ.22க்கு பெற்றுள்ளனர்.

÷நீலகிர மாவட்டத்தில் 120 சிறு தேயிலை விவசாய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 28க்கும் மேற்பட்ட சங்கங்களுக்கு ரூ.60 லட்ச ரூபாய் வரை சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. பசுந்தேயிலை கொள்முதல் நிலையம், வாகனம், தராசு, பை உள்ளிட்ட அனைத்து பொருட்களும் தேயிலை வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தேயிலை தோட்டங்களில் மறு நடுவு செய்ய ஏக்கருக்கு ரூ.30,000 வழங்கப்படுகிறது. இதற்கான மானியத்தை ரூ.50,000மாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலப்பட மற்றும் தரமற்ற தேயிலைத் தூளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. தேயிலையில் சாயம் கலப்பவர்கள் மீதான நடவடிக்கை மாநிலம் முழுதும் முடுக்கி விடப்பட்டுள்ளது. தேயிலைத் தொழிலை மேம்படுத்த தேயிலை வாரியம் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. இருப்பினும் பல இடங்களில் விவசாயிகள் உரிய காலத்தில் இலை பறிக்காமல் கத்தியைக் கொண்டு இலை பறிக்கின்றனர். இதை தவிர்க்க வேண்டும்.

கென்யா மற்றும் இலங்கையில் ஏற்பட்டிருந்த வறட்சியால் ஏற்றுமதியோடு உள்நாட்டு வர்த்தகர்களும் கடந்த 2 ஆண்டுகளாக நீலகிரி தேயிலையை அதிகளவில் வாங்கி வருகின்றனர். தற்போது அங்கு வறட்சி நீங்கியுள்ளதால் வர்த்தகர்களின் கவனம் நீலகிரியை விட்டு திரும்பியுள்ளது. எனவே, தரத்தை தக்க வைத்தால் மட்டுமே எதிர்காலத்தில் தேயிலையின் விலையை நிர்ணயிக்க முடியுமெனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தேயிலை ஆராய்ச்சி மைய உதவி இயக்குநர் ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

நீலகிரியில் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 75 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். 170 தனியார் தொழிற்சாலைகளும், 17 கூட்டுறவு தொழிற்சாலைகளும் தேயிலைத் தூளை தயாரிக்கின்றன. உபாசி வேளாண் அறிவியல் நிலையம் தேயிலை தர மேம்பாட்டு திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் தேயிலையின் தரம் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுத்துள்ளது. நீலகிரியில் மண் அரிமானம் அதிகளவில் ஏற்படுகிறது. அதற்காக மண் அரிமானத்தை தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உபாசி வேளாண் அறிவியல் நிலைய தலைவரும், திட்ட ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் குமாரவடிவேலு வரவேற்று பேசுகையில், ஒவ்வொரு நாளும் புதிய தொழில் நுட்பங்களோடு விவசாயத் துறை வளர்ந்து வருகிறது. அனைத்து தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் கடைபிடிப்பது கடினம். எனவே, அந்தந்த

பகுதிகளுக்கேற்ற தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப தொழில் நுட்பங்களை மாற்றி வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

÷சிறு தேயிலை விவசாய சங்கங்கள், மலர் சாகுபடியாளர்கள் மற்றும் காய்கறி விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு தொழிற்நுட்ப தகவல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது டி.மணியட்டி சிறு தேயிலை விவசாயிகள் சங்கத்துக்கு ரூ.2.59 லட்சத்துக்கான சுழல் நிதி காசோலையை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் வழங்கினார்.

அதேபோல, கூடலூரிலுள்ள தர்மகிரி சிறு விவசாயிகள் சங்கத்துக்கு பசுந்தேயிலை கொள்முதல் மையம் அமைக்க ரூ.80,000 மானியத்துடன் கம்ப்யூட்டரும் வழங்கப்பட்டது.

உபாசி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி ராமமூர்த்தி நன்றி கூறினார்.

**பயிறு விதை கிராம திட்ட பயிற்சி முகாம்**

First Published : 17 Mar 2010 12:39:25 AM IST


மதுராந்தகம், மார்ச் 16: அச்சிறுபாக்கம் ஒன்றியம்,இராமாபுரம் கிராமத்தில் பயறு வகை விதை கிராம திட்ட பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

÷இம் முகாமில் பயிறு வகைகள்,பயிறு வகை திட்டத்துக்கான மானியங்கள்,பயிறு விதைகள்,விதை உற்பத்தி ஆகியவை குறித்து தொழில்நுட்பங்களுடன் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

÷முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் துரைவேலு தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகர் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி அலுவலர் தீர்த்தம் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் கிருஷ்ணகுமாரி,விதை சான்று அலுவலர் பிரபாகரன்,நபார்டு வங்கி துணை பொது மேலாளர் சுதாகர் ஆகியோர் பயிற்சி அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் துரைபாபு நன்றி கூறினார். இப் பயிற்சி முகாமில் 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை முதல்வர் நேரில் கேட்டறிய வேண்டுகோள்**

First Published : 17 Mar 2010 01:08:13 AM IST



சென்னை, மார்ச் 16: கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை தமிழக முதல்வர் கருணாநிதி நேரில் கேட்டறிய வேண்டும் என்று இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான ராஜா, முதன்மைச் செயலாளர் எஸ். யோகநாதன், துணைத் தலைவர் ராஜ்குமார் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்: தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் தமிழக அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த நிலையில் 2009}10 அரவைப் பருவத்தில் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் பருவமழை

தவறியதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.  இந்த நிலையில் அரசின் ஆதரவால் மட்டுமே கரும்பு விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்த முடியும். எனவே, விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 2,000}ஆக உயர்த்த வேண்டும் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**அதிக விளைச்சலால் வெங்காய விலை வீழ்ச்சி**

First Published : 17 Mar 2010 06:47:17 AM IST

திண்டுக்கல், மார்ச் 16: போதிய மழை பெய்யாததால் வெங்காய விளைச்சல் அதிகமாகி விலை வீழ்ச்சி அடைந்தது. இதனால் வெங்காய சாகுபடியாளர்களும், வியாபாரிகளும் வேதனை அடைந்துள்ளனர்.

நாட்டிலேயே சின்ன வெங்காயத்தை அதிகளவில் கொள்முதல் செய்து பெரிய அளவில் வியாபாரம் நடைபெறுவது திண்டுக்கல்லில்தான். இங்கு மைசூர், உடுமலைப்பேட்டை, தாராபுரம், திருப்பூர், எரியோடு, வடமதுரை, அருப்புக்கோட்டை, கோவில்பட்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் இருந்து நாளொன்றுக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் கிலோ வரை வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு தமிழகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்கு மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி நடைபெறுவது வழக்கம்.

கடந்த 2 மாதங்களுக்கு முன் சின்ன வெங்காயம் கிலோ 22 முதல் 25 ரூபாய் வரை விற்பனை ஆகி வந்துள்ளது. ஆனால் மாசி மாதத்தில் மழை பெய்யாத காரணத்தால் சின்ன வெங்காயத்தின் விளைச்சல் பெருகி விற்பனைக்கான வரத்து அதிகரித்தது.

இதனால் தற்போது விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு கிலோ 3 முதல் 4 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை வீழ்ச்சி நுகர்வோருக்கு லாபத்தை அளித்தாலும் விவசாயிகளும், வியாபாரிகளும் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

திண்டுக்கல் வெங்காயப் பேட்டையில் சின்ன வெங்காயம் விற்பனை செய்வதற்காக வந்த சத்தியமங்கலம் வட்டம் தாளவாடி சூசைபுரம் பகுதியைச் சேர்ந்த வியாபாரி ராஜரத்தினம் கூறியது:

இலங்கைக்கான சின்ன வெங்காயம் ஏற்றுமதி குறைந்ததாலும், மழை பெய்யாததால் அதிக விளைச்சல் ஏற்பட்டதனாலும் கடந்த 2 மாதங்களில் மட்டும் வெங்காய வியாபாரத்தில் ரூ.1.5 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.திண்டுக்கல் மொத்த கொள்முதல் வியாபாரி கே.டி.நராயணசாமி சின்ன வெங்காயத்தின் நிலை குறித்து கூறியது:

சில மாதங்களுக்கு முன்பு வரை மலேசியா, சிங்கப்பூர், இலங்கை நாடுகளுக்கு சின்ன வெங்காயம் திண்டுக்கல்லில் இருந்து திங்கள், புதன், வெள்ளி என வாரத்துக்கு 3 நாள்கள் ஏற்றுமதி செய்து வந்தோம். இந்தக் கிழமைகளில் ஒரு நாளுக்கு 260 டன் வரை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

இந்த நாடுகளில் உருளைக்கிழங்கு அளவுக்கு சின்ன வெங்காயம் வேண்டும் என்று கேட்பதனால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. சின்ன வெங்காயத்தை நடவு செய்தது முதல் 50 அல்லது 60 நாள்களில் அறுவடை செய்துவிடலாம். மாசி, பங்குனி மாதத்தில் மழை பெய்யாததால் விளைச்சல் பெருகி வரத்து அதிகமாகிவிட்டது. இதனால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு விவசாயிகளும், வியாபாரிகளும் நஷ்டமடைந்து வருகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் அரசாங்கமே எந்த தரமுடைய வெங்காயமாக இருந்தாலும் அவற்றை கிலோ ரூ.4.50 என்ற வீதத்தில் கொள்முதல் செய்து வருகிறது.இதனால் வெங்காயம் பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப்படுவதில்லை. கரும்பு, நெல் போன்ற விவசாயப் பயிர்களை அரசு கொள்முதல் செய்கிறது. இதேபோல் தமிழகத்திலும் சின்ன வெங்காயத்தை கொள்முதல் செய்து ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்தால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாது. அரசு உரிய நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து மீள முடியும் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 79 அடி**

First Published : 17 Mar 2010 12:52:24 AM IST

ஈரோடு, மார்ச் 16: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 79.00 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 680 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 5 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையி0ன் நீர் இருப்பு 15. டிஎம்சி.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 17 Mar 2010 01:05:46 AM IST

சேலம், மார்ச் 16: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 73.36 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,192 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 35.65 டி.எம்.சி.

தினமலர்

**கோயம்பேடு மார்க்கெட்டில் குவிகிறது சாத்துக்குடி வரத்து அதிகம்; விலை வீழ்ச்சி**

கோயம்பேடு : கோயம்பேடு மார்க்கெட்டிற்கு நாளுக்கு நாள் சாத்துக்குடி வரத்து அதிகரித்து கொண்டிருப்பதால், அதன் விலை அதிரடியாக குறைந் துள்ளது.கோயம்பேடு பழ மார்க்கெட் டிற்கு ஆந்திர மாநிலத்தில் உள்ள காடபத்திரி, அனந்தப்பூர், நலகொண்டா பகுதிகளில் இருந்து சாத்துக்குடி வருகின்றன.கடந்த சில நாட்களாக சாத்துக்குடி பழத்தின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், கோயம்பேடு மார்க்கெட் டிற்கு அதன் வரத்து அதிகரித்துள் ளது. இதனால் அதன் விலையும் கணிசமாக குறைந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி, மொத்த விலையில் கிலோ ஒன்றுக்கு 10 முதல் 13 வரையும், சில்லரை விற்பனையில் 15 முதல் 20 ரூபாய் வரை விற்பனை நடந்தது.விலை வீழ்ச்சி குறித்து கோயம்பேடு பழ மார்க்கெட் சங்கத் தலைவர் சீனிவாசன் கூறுகையில், "கடந்த சில நாட்களாக சாத்துக்குடி பழத்தின் வரத்து அதிகரித்துள்ளது. நாள்தோறும் எட்டு முதல் 10 லாரிகளில் சாத்துக்குடி வந்திருந்த நிலையில், தற்போது 15 முதல் 20 லாரிகளில் வந்து இறங்குவதால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது.வரும் வாரங்களில் சாத்துக்குடி வரத்து மேலும் அதிகரிக்கும்' என்றார்.

**வாழை, கரும்பு பயிர்கள் வாடல்காரமடை விவசாயிகள் கவலை**

காரமடை: காரமடையில், அறுவடை நிலையிலுள்ள வாழை, கரும்பு பயிர்கள், தண்ணீரின்றி காய்ந்து வருகின்றன. இதனால், விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். மேட்டுப்பாளையம், காரமடை பகுதிகளில் கறிவேப்பிலை, வாழை, கரும்பு அதிகளவில் பயிரிடப்படுகிறது. தவிர, காய்கறி, மலர்கள், தானியம், கால்நடை தீவன பயிர்களும் பயிரிடப்படுகின்றன. மேட்டுப்பாளையம் பகுதியில் பவானி ஆற்றை ஒட்டியுள்ள தேக்கம் பட்டி, சிறுமுகை, பாலப்பட்டி பகுதிகளில் ஆற்று நீரை மோட்டார் மூலமாக எடுத்து விவசாயம் செய்யப்படுகிறது. மற்ற பகுதிகளில், நிலத்தடிநீரை மட்டுமே நம்பி விவசாயம் நடக்கிறது. பருவநிலை மாற்றத்தால் சில ஆண்டுகளாக கோவை மாவட்

டத்தில் மழைபொழிவின் அளவு வெகுவாக குறைந்ததால், நிலத்தடி நீர் மட்டம் மிகவும் தாழ்வாக சென்றுவிட்டது. கிணறுகளில் நீர் ஊற்றுகள் குறைந்துவிட்டன. சில கிணறுகள் முற்றிலும் வறண்டு விட்டன.

இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் வாழை, கரும்பு பயிர்களுக்கு அதிக முதலீடும், நீரும் தேவைப்படுகிறது. வரும் தமிழ் புத்தாண்டு பண்டிகைக்கு பயிர் அறுவடை செய்ய கடந்த ஆடி, ஆவணி மாதங்களில் நடப்பட்டு தற்போது அறுவடை நிலையில் உள்ள வாழைகள்,
நீர் பற்றாக்குறையால் காய்ந்து வருகின்றன. காரமடை அருகே உள்ள தாயனூர் பகுதி விவசாயிகள் கூறிய தாவது: "சித்திரை விஷு' பண்டிகை காலத்தில், வாழை பழத்துக்கு நல்ல விலை கிடைக்கும். அதை கருத்தில் கொண்டு கதளி, பூவன், தேன் வாழை, பச்சை வாழை உட்பட பலவகை வாழைகளை சாகுபடி செய்துள்ளோம். ஒரு ஏக்கர் வாழை சாகுபடிக்கு 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை குறைவாக பெய்ததால், கிணறுகளில் ஊற்று குறைந்து விட்டது. நீலத்தடி நீர் மட்டமும் கீழ் நோக்கி சென்றதால், போர்வெல் கிணறுகளிலும் நீர் குறைந்து விட்டது. அறுவடைக்கு தயாராகியுள்ள வாழை மரங்களுக்கு பாய்ச்ச நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், விளைச்சல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கரும்பு விளைச்சலும் 25 சதவீதம் அளவு குறையக்கூடும். பல்வேறு காரணங்களால், விவசாய வேலைகளுக்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், வாழைக்கன்று நடுதல், களை எடுத்தல் பணிகளை ஒப்பந்த முறையில் செய்ய வேண்டியுள்ளது. மேலும், பருவநிலை மாற் றத்தால் பல்வேறு நோய்கள் பயிர்களை தாக்கியுள்ளதாலும், அதிக பணம் செலவாகிறது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஒட்டன்சத்திரத்தில் வெங்காய விலை சரிவு பட்டறைகளில் சேமிக்கும் விவசாயிகள்**

ஒட்டன்சத்திரம் : விலை குறைந்து வருவதால் அறுவடை செய்யப்படும் சின்ன வெங்காயம் மூங்கில் பட்டறையில் வைத்து ஒட்டன்சத்திரம் விவசாயிகள் பாதுகாத்து வருகின்றனர்.
ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நடப்பட்டிருந்த சின்ன வெங்காயம் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நடவின் போது விதை வெங்காயம் விலை உயர்ந்திருந்ததால், அதிக விலை கொடுத்து வாங்கி விவசாயிகள் நட்டனர். நடவின் போது வெங்காயம் கிலோ 30 ரூபாய்க்கும் அதிகமாக விற்றது. மகசூலின் போது நல்ல விலை கிடைக்கும் என்று எண்ணத்தில் விவசாயிகள் சின்ன வெங்காயத்தை அதிகம் பயிரிட்டனர்.எதிர்பார்ப்பிற்கு மாறாக வெங்காயம் விலை படிப்படியாக குறைந்து கடந்த சில நாட்களாக கிலோ 10 ரூபாய்க்கும் கீழ் விற்கிறது.நடவின் போது விதை வெங்காயம் விலை உயர்வு, கூலி ஆட்கள் பற்றாக்குறையினால் அதிக விலை கொடுக்க வேண்டி உள்ளது உள்ளிட்ட பல காரணங்களால் தற்போது விற்கும் விலையானது வெங்காயத்தை பறித்தெடுக்கும் கூலிக்குக் கூட கட்டுபடியாகாத நிலை ஏற்பட்டுள்ளது.அதிகம் பாதிப்பு வரும் என்று உணர்ந்த விவசாயிகள் சிலர் அறுவடை செய்யப்படும் வெங்காயத்தை அதற்கென்று தயார் செய்யப்பட்ட மூங்கில் பட்டறைகளில் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

**பழ விலை உயர்வு**

மதுரை : மதுரையில் கோடை சீசன் ஆரம்பித்ததையொட்டி, அனைத்து பழங்களின் விலை உயர்ந்துள்ளன.யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது :ஒரு கிலோ வாஷிங்டன் ஆப்பிள் 120 ரூபாயிலிருந்து 140 ரூபாய், ஐஸ்கிரீம் ஆப்பிள் 130 ரூபாய், சோனா திராட்சை 60 ரூபாய், மஸ்கட் திராட்சை 75, பன்னீர் திராட்சை 40, சாத்துக்குடி 25, நாக்பூர்

திராட்சை 40, காபூல் மாதுளை 140, சீட்லெஸ் மாதுளை 100, தர்பூசணி 8, அன்னாசி 30, சப்போட்டா 30, பப்பாளி 15, சீன ஆப்பிள் 100, நெல்லிக்காய் 50, சீன பேரிக்காய் 70, மலைவாழைப்பழம் 3.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.

**லாரி வாடகையால் பருப்பு விலை உயர்வு**

மதுரை : சரக்கு போக்குவரத்திற்கென லாரி வாடகை உயர்த்தப் பட்டதால், மதுரையில் அனைத்து பருப்பு விலையும் உயர்ந்து உள்ளது. உள்ளூர் தேவைக்காக வெளிமாநிலங்களில் இருந்து அனுப்பப்படாததும் விலை உயர்வுக்கு காரணம். பருப்புவியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன்கூறியதாவது :கடந்த வாரம் 4500 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ துவரம் பயறு 4650 ரூபாயாகவும், பருப்பு 6200 ரூபாயிலிருந்து 6400 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. உளுந்தம் பயறு 4450 ரூபாயிலிருந்து 4700 ரூபாயாகவும், பருப்பு 6200 ரூபாயிலிருந்து 6300 ரூபாயாகவும், பாசி பயறு 6100ரூபாயிலிருந்து 6200 ரூபாயாகவும், பருப்பு 7700 ரூபாயிலிருந்து 7800 ரூபாயாகவும் உயர்ந்ததுள்ளது.கடலை பயறு 2150 ரூபாயிலிருந்து 2200 ரூபாயாகவும், பருப்பு 2650 ரூபாயிலிருந்து 2700 ரூபாயாகவும், பட்டாணி பயறு 1425 ரூபாயிலிருந்து 1450 ரூபாயாகவும், பருப்பு 1625 ரூபாயிலிருந்து 1650 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது என்றார்.

**தக்காளி ரூ.5 தான்**

மதுரை : பட்டாணி வரத்து குறைந்ததால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் விலை உயர்ந்துள்ளது.கடந்த வாரம் 30 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ பட்டாணி நேற்று 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதேபோல் சோயா பீன்ஸ் 40 ரூபாய், பீன்ஸ் 22 ரூபாயாக உயர்ந்துள்ளது.மற்ற காய்கறி விலை குறித்து, மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது : ஒரு கிலோ தக்காளி 5 ரூபாய், உருட்டு தக்காளி 4, கத்தரிக்காய் 12, வெள்ளை கத்தரிக்காய் 8, பூசணிக்காய் 5, சுரைக்காய் 5, வெண்டைக்காய் 11, புடலங்காய் 8, நூக்கல் 9, பீட்ரூட் 8, முள்ளங்கி 7, சவ்சவ் 10, முட்டைகோஸ் 5, காலிபிளவர் 3-6, பச்சை மிளகாய் 12, ஆந்திர பச்சை மிளகாய் 10, வெங்காயம் 10-15, பாகற்காய் 15, சிறியது 25, இஞ்சி 35, உருளை கிழங்கு 12, சேனை கிழங்கு 18, கருணை கிழங்கு 22, புதினா 7, கொத்தமல்லி 15, கறிவேப்பிலை 18, கீரை வகைகள் 10, முருங்கைக்காய் 15, கேரட் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**மல்லிகை விலை ரூ.60**

மதுரை : மதுரையில் மல்லிகை வரத்து அதிகரித்துஉள்ளதால், நேற்று ஒரு கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.மற்ற பூ விலை குறித்து, மார்க்கெட் சங்கத் தலைவர் ராமச் சந்திரன் கூறுகையில்,""கனகாம்பரம் 200 ரூபாய், பிச்சிப்பூ 150, அரளி 70-80, கோழிக் கொண்டை 30, மரிக்கொழுந்து 25, சம்பங்கி 60, செவ்வந்தி 50, வாடாமல்லி 25, ரோஜா 60-50 ரூபாய்க்கு விற்கப்பட்டது,'' என்றார்.

**வறட்சியால் பசுமாடுகளை விற்கும் விவசாயிகள் பால் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்**

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் நிலவி வரும் வறட்சியால், கால்நடை தீவனத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கறவை மாடுகளை அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் பால் உற்பத்தி மூன்றில் ஒரு பங்கு குறைந்து போனது. தொடர்ந்து வறட்சி நிலவினால், பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் மக்கள் கலக்கமடைந்துள்ளனர். வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற

கிராமங்களில் விவசாயத்தை நம்பி பிழைப்பு நடத்திவரும் விவசாயிகளும், விவசாய கூலித்தொழிலாளர்களும் கறவை மாடுகளை வளர்த்து வருகின்றனர்.

விளைநிலங்களில் புதர்மண்டி கிடக்கும் களை செடிகளையும், கதிர் அறுவடை செய்யப்பட்ட நெல், கம்பு, சோளம், நிலக்கடை உள்ளிட்ட பயிர்களின் வைக்கோலையும் உட்கொண்டு, குறைந்த பாரமரிப்பில் கணிசமான வருவாய் ஈட்டிக் கொடுப்பதால், விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பதில் ஆர்வம் அதிகரித்தது. கிராமங்கள் தோறும் முகாமிட்டு, கறவைமாடுகளுக்கு "உறைவிந்து' செலுத்தி, குறைந்த பராமரிப்பு செலவில் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் அதிக பால் கறக்கும் உயர்ரக கலப்பின பசுக்களை, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் தனியார் பால் நிறுவனங்களும் செயற்கை கருவூட்டல் முறையில் உருவாக்கி கொடுத்ததாலும் கறவைமாடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது.

அதனால், வாழப்பாடி பகுதியில் குக்கிராமங்களிலும் நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்து வருகின்றனர். அதுமட்டுமின்றி பல்வேறு அரசுத்துறைகளும், தனியார் நிறுவனங்களும் கறவை மாடு வளர்ப்புக்கு குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கியதாலும், பால்கூட்டுறவு சங்கங்களும், தனியார் நிறுவனங்களும், பால் கொள்முதல் விலையை உயர்த்தியதாலும் கறவை மாடு வளர்ப்போரின் எண்ணிக்கையும் பால் உற்பத்தியும் இரு மடங்காக உயர்ந்தது.

இதற்கிடையே, 6 மாதங்களுக்கும் மேலாக வாழப்பாடி பகுதியில் மழை பொழிவு இல்லாததால் கடும் வறட்சி நிலவி வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் அடியோடு குறைந்து போனதால், விவசாய கிணறுகளும், ஃபோர்வெல்களும் வறண்டு போயின. விளைநிலங்கள் பொட்டல் காடுகளாக காட்சியளிக்கின்றன.

வாழப்பாடி பகுதியில் நிலவி வரும் கடும் வறட்சியால், கால்நடை தீவனத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு மாற்று தீவனமாக கொடுக்கப்படும் புண்ணாக்கு, பருத்திக்கொட்டை, மரவள்ளி கிழங்கு கழிவு, மக்காச்சோள திப்பி ஆகியவற்றின் விலையும் இருமடங்காக உயர்ந்துள்ளது.

அதனால், கறவைமாடுகளை வளர்ப்பதற்கு வழியின்றி அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு வாழப்பாடி பகுதி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஏராளமான விவசாயிகள் பசு, எருமை உள்ளிட்ட கறவை மாடுகளை விற்பனை செய்து வருவதால், பால் உற்பத்தி மூன்றில் ஒரு பங்கு குறைந்து போனது.

குறிப்பாக, வாழப்பாடி புதுப்பாளையம் பால் கூட்டுறவு சங்கத்திற்கு நாளொன்றுக்கு ஏறக்குறைய 3,000 லிட்டர் அளவிற்கு பால் விற்பனைக்கு வந்த நிலை மாறி, தற்போது 2,000 லிட்டர் அளவிற்கே விற்பனைக்கு வருகிறது. அரசின் பால் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமின்றி, வாழப்பாடி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பால் கொள்முதல் நிறுவனங்களுக்கும் பால் வரத்து பெருமளவில் குறைந்து விட்டது. தொடர்ந்து வறட்சி நிலவினால், உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டு பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் மக்கள் கலக்கமடைந்துள்ளனர்.

**கலப்பட விதையால் பாதிப்பு கண்ணீர் சிந்தும் விவசாயிகள்**

மானாமதுரை : கலப்பட நெல் விதையால் விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்து வருகின்றனர். இதை தவிர்க்க மாவட்டத்தில் விதை மையங்களை அமைக்க வேண்டும். இங்கு ஆண்டு தோறும் 89 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி

செய்யப்படும். மழை பற்றாக்குறையாக இருப்பதால், ஒரு போக நெல் சாகுபடி மட்டுமே நடக்கிறது. பருவ மழை துவக்கத்தின் போது அரசு, தனியார் மையங்களில் நெல் விதைகளை வாங்கி செல்கின்றனர். ஆண்டுக்கு சராசரியாக 600 டன் விதை தேவைப்படுகிறது. ஆனால் கலப்பட விதை இருப்பதால், எதிர்பார்த்த அறுவடை கிடைக்காமல், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் வாங்கிய கடனை, திருப்பி செலுத்த முடிவதில்லை. தற்போது அறுவடை முடிந்து புதிய நெல் இருப்பு வைக்கப்படுகிறது. எதிர்பார்த்த மகசூல் இல்லை என விவசாயிகள் புலம்புகின்றனர். சித்திரையில் நெல் நடவு செய்யும் விவசாயிகள், ஆனியில் அறுவடை செய்கின்றனர். இவர்களிடம் இருந்து ஆடிப்பட்டத்திற்கு நடவு செய்யும் விவசாயிகள், விதை பெறுகின்றனர். இக்காலகட்டத்தில் விதை உற்பத்தியை அரசு அதிகரித்தால், வெளி மாநில விதையை வாங்கி ஏமாறும் நிலை தவிர்க்கப்படும்.கீழமேல்குடி விவசாயி சோணைத்தேவன் கூறுகையில், ""கடந்த ஆண்டு இரண்டு ஏக்கரில் நெல் நடவு செய்தேன். அதிகாரிகள் பரிந்துரைத்த தனியார் மையத்தில் வாங்கிய நெல் விதைகள், கலப்படமாக இருந்ததால், ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டும் கலப்படத்தால் மகசூல் குறைந்துள்ளது,'' என்றார்.

**விவசாயிகள் சங்க மாநில தலைவர் தங்கமணி கூறுகையில்,** ""தனியார் மையங்களில் விற்ற விதை நெல், ஆந்திராவை சேர்ந்தது. இதில் கலப்படம் இருப்பதாக, அதிகாரிகளிடம் தெரிவித்தோம். ஆனால் கண்டு கொள்ளவில்லை. வரும் பருவத்தில் மாவட்டத்திலேயே, விதை நெல் மையங்களை,திறக்க வேண்டும்,'' என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை : விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் நடக்கவுள்ளது. விவசாயிகள் குறைகளை தெரிவிக்கலாம், என, கலெக்டர் மகேசன் காசிராஜன் தெரிவித்தார்.

**விதை கிராம பயிற்சி முகாம்**

சிங்கம்புணரி : மாந்தகுடிப்பட்டியில் நெல் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் ரேவதி தலைமை வகித்தார். பயிர் வளர்ச்சி, கதிர் பருவம், அறுவடைக்கு பிந்தைய நிலை, உயிர் உரம், விதை நேர்த்தி பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாய உதவி இயக்குனர் மணிவண்ணன், அலுவலர் சகாய ஜெயக்கொடி பங்கேற்றனர். அலுவலர் வேலுச்சாமி நன்றி கூறினார்.

**கோடையில் உற்பத்தி சரிவு ஆவின் பால் கடும் தட்டுப்பாடு**

சிவகங்கை : உற்பத்தி குறைவால் ஆவின் நிறுவனத்தில், தினமும் 10 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் குறைந்துள்ளது. இதனால் பற்றாக்குறை ஏற்பட்டு, வாடிக்கையாளர்கள் பரிதவிக்கின்றனர். ஆவின் நிறுவனம், கூட்டுறவு சங்கங்களில் இருந்து பால் கொள்முதல் செய்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.பதப்படுத்தப்பட்ட பால் ஒரு லிட்டர், அரை லிட்டர், 200 மி.லி., "பாக்கெட்' களாக விற்கப்படுகின்றன. தமிழகத்தில் தினமும் சராசரியாக, 30 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது.

**உற்பத்தி குறைவு:**கோடை காலத்தில் பால் உற்பத்தியில் சரிவு ஏற்படும்.பொதுவாக ஜனவரி, பிப்ரவரியில், மாடுகளுக்கு சினை பிடிக்கும் பருவம். கன்று ஈன்று ஆறு மாதம் வரை பால் கிடைக்கும். தற்போது சினை பிடிக்கும் தன்மை குறைந்துள்ளது. மூன்று மாடுகளில் ஒன்று மட்டுமே சினை பிடிக்கிறது.இதனால், தற்போது பால் உற்பத்தி

குறைந்துள்ளது. ஆவினில் தினமும் 20 லட்சம் லிட்டர் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் 30 சதவீத பால் வினியோகம் குறைந்துள்ளது. இதுகுறித்து ஆவின் அதிகாரி ஒருவர் கூறுகையில், ""தீவன பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.கூட்டுறவு சங்க உறுப்பினருக்கு பசும் புல் வளர்க்க, 50 சதவீத மானியம் தருகிறோம். மாடுகளுக்கு பால் சுரப்பதற்கான சத்துக்கள் இல்லாததால், உற்பத்தி குறைந்துள்ளதாக, ஆய்வில் தெரியவந்துள்ளது. பால் உற்பத்தியை பெருக்க நெல்லை, ஈரோடு, வேலூரில் தாது உப்புக்கலவை (மினரல் மிக்ஷர்) பவுடர் தயாரிக்கும் ஆலை அமைத்துள்ளோம். இந்த பவுடரை தினமும் 50 கிராம் வீதம் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். இதை குறைந்த விலையில் கொடுக்கிறோம். இதுபோல உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

**வேளாண் பல்கலை. இணையதளம்: விவசாயிகளுக்கு அழைப்பு**

திருச்சி: வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பொன்னுசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வேளாண்மை தொழில்நுட்பங்கள் தொடர்பான ஒரு இணையதளத்தை உருவாக்கியுள்ளது.

இந்த இணையதளத்தில் வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்கள், ரகங்கள், வேளாண் கருவிகள் மற்றும் அதன்பயன்பாடு மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து தொழில்நுட்பங்களும் இடம் பெற்றுள்ளது. http://www.agritech.tnau.ac.in என்ற முகவரி கொண்ட இந்த வேளாண் தொழில்நுட்ப இணையதளத்தை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பார்வையிடலாம். இதில் வேளாண்மை மட்டுமில்லாமல் தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல், விதைச்சான்று, அங்கக சான்றளிப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வனவியல், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளர்ப்பு சம்பந்தமான தகவல்களை பெற முடியும்.மேலும், விவசாயிகள் கூட்டமைப்புகள், வெற்றிக் கதைகள், பல்கலைக்கழகத்தின் வெளியீடுகள், கேள்வி பதில் பகுதி, தொடர்பு கொள்ள வேண்டிய பல்கலைக்கழகத்தின் முகவரிகள், அரசு திட்டங்கள் மற்றும் சேவைகள், வங்கிச்சேவை மற்றும் கடனுதவி, பயிர் காப்பீடு, வேளாண் அறிவியல் நிலையங்கள், கிசான் அழைப்பு மையம் (1551) போன்ற தகவல்களையும் பெறலாம். எனவே, விவசாயிகள் இந்த இணையதளத்தினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தங்கள் அருகில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**சங்கராபுரம் கமிட்டிக்கு நெல் வரத்து அதிகரிப்பு**

சங்கராபுரம்: சங்கராபுரம் மார்க்கெட் கமிட்டிக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. சங்கரா புரம் மார்க்கெட் கமிட் டிக்கு, 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் விளை பொருட்களை கொண்டு வருகின்றனர். சங்கராபுரம் மார்க்கெட் கமிட்டிக்கு நாள்தோறும் 3,000 முதல் 4,000 வரை நெல் மூட்டைகள் வந்து கொண்டிருந்தன. நேற்று முன்தினம் வழக்கத் தைவிட அதிகரித்து 5,000 மூட்டைகள் நெல் விற் பனைக்கு வந்தது. நேற்று முன்தினம்

விற்பனைக்கு கொண்டு வந்த பொன்னி நெல் அதிக பட்ச விலையாக மூட்டை ஒன்றுக்கு 785 ரூபாய், ஏ.எஸ்.டி., 735க் கும், சொர்ணா 729க்கும், கோ 45. 735 க்கும், டி.கே. எம்.9 .640 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

**கோடை காலத்தில் வெப்பத்தை தவிர்க்க சாலையோர மரங்கள் வளர்ப்பு அவசியம்**

திண்டிவனம்: திண்டிவனம் பகுதி மக்களை வெயில் கொடுமையில் இருந்து பாதுகாக்க நகரம் முழுவதும் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசுபடுவதை கட்டுப்படுத்தவும், மழைவளம் பெருகவும், வெயில் கொடுமையில் இருந்து மக்கள் இளைப் பாறுதல் பெறவும் மரங்களின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. சித்திரை மாதம் துவங் கும் முன்பே வெயிலின் உக்ரம் மக்களை வாட்டி வதைக்க துவங்கிவிட் டது. புதுச்சேரி உள்ளிட்ட கடலோர பகுதிகளில் கடல் காற்றால் வெயிலின் தாக்கம் அதிகம் தெரியாது. ஆனால் கடற்கரை பகுதியில் இருந்து 40 கி.மீ.,க்கு அப்பால் உள்ள விழுப்புரம், திண்டிவனம் மற்றும் அதைவிட தொலைதூரத்தில் உள்ள செஞ்சி, திருவண்ணாமலை மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் கடும் வெயில் மக்களையும், கால்நடைகளையும், மண் வளத்தையும் சுட்டெரித்து வருகிறது.

சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்த திண்டிவனம் நகரில் மக்கள் நெரிசல் மிகுந்த மேம்பாலம் அமைந் துள்ள பகுதியில் இயற்கை அழகு தரும் மரங்கள் கண்ணுக்கு எட்டிய தூரத் தில் தென்படவில்லை. இதனால் சூரிய வெப்பம் அனலாக தகிக்கிறது. கோடைக் காலத்தில் வெயி லின் தாக்கத்தில் இருந்து தங்களை காத்துக் கொள்ள முடியாமல் மக்கள் தவித்து வருகின் றனர். திண்டிவனம் நகரம் முழுவதும் சாலையோரங்களிலும், முக்கிய இடங் களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க நகராட்சி நிர்வாகம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன் னார்வ அமைப்புகளும் முன்வர வேண்டும். குறிப் பாக பல்வேறு பகுதிகளில் இருந்து தினம் ஆயி ரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் திண்டி வனம் மேம்பாலம், நான்கு வழிச் சாலைகள், பழைய பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மரக்கன்றுகள் நட்டு பாது காக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சர்க்கரை விலை தொடர்ந்து குறைகிறது**

திருப்பூர்: திருப்பூர் மார்க்கெட்டில் சர்க் கரை விலை, கடந்த வாரத்தை விட இரண்டு ரூபாய் குறைந்து கிலோ 32 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மார்க்கெட் நிலவரம் வருமாறு: சமையல் ஆயில் விற்பனை குறைவு: வெயில் அதிகரித்து இருப் பதால், க்களிடையே எண்ணெய் பயன்பாடு குறைந்துள்ளது; விற் பனை அளவு குறைந்துள்ளதால், விலை இறக்கம் ஏற்பட்டுள்ளது. சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகை யில், ""கிலோவுக்கு இரண்டு ரூபாய் வரை சமையல் ஆயில் விலை குறைந்துள்ளது. கடலை எண் ணெய் விலை இரண்டு ரூபாய் குறைந்து 73 ரூபாய்; ரீபண்டு ஆயில் 82; சூரியகாந்தி எண்ணெய் 60; பாமாயில் 45; விளக்கெண் ணெய் 80; தேங்காய் எண்ணெய் 58; நல்லெண்ணெய் 92; நெய் 280 ரூபாய் என விற்கப்படுகிறது. வெயில் காலம் துவங்கி இருப்பதால், ஆயில் தேவை குறைந்து விற்பனையும் குறைந்துள்ளது," என்றார். முட்டை விலையில் மாற்ற மில்லை: முட்டை வியாபாரி குப்புசாமி கூறுகையில், ""முட்டை விலையில் எந்த மாற்றமுமின்றி உள்ளது. கொள்முதல் விலை 2.45 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.50; சில்லரை விற்பனையில் 2.75 ரூபாய்க்கு விற்கிறது. எதிர்பார்த்த அளவுக்கு விற்பனை இல்லை," என்றார்.

சர்க்கரை விலை தொடர்ந்து குறைகிறது: தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறியதாவது: சர்க்கரை விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. கிலோவுக்கு இரண்டு ரூபாய் குறைந்து, 32 ரூபாய்க்கு விற்கிறது. தட்டைப் பயறு விலையும் வீழ்ச்சி அடைந் துள்ளது; கிலோவுக்கு 10 ரூபாய் குறைந்து 35 ரூபாய்க்கு விற்கிறது.  துவரம் பருப்பு 57; கொள்ளு 23; சுண்டல் கடலை 31; கருப்பு உளுந்து 56; வெள்ளை உளுந்து 68; பச்சைப்பயறு 63; பாசிப்பருப்பு 75 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. புது பருப்புகளின் வரவு அதிகமாக உள்ளது. குடும்பங்களில் ஓராண் டுக்கு தேவையான பொருட்களை வாங்கும் நேரம் என்றாலும், எதிர் பார்த்த விற்பனை இல்லை. காய்ந்த மிளகாய் சீசன் துவங்கி யுள்ளதால்,  வரத்து அதிகமாக உள் ளது; கிலோவுக்கு 10 ரூபாய் குறைந்து, 60 ரூபாய்க்கு விற்கிறது. கொத்தமல்லி 55 முதல் 60 வரை, சீரகம் 140 ரூபாய், மிளகு 160 ரூபாய் என விற்பனை செய்யப் படுகிறது.  மசாலா பொருள் தயாரிப்ப தற்கான  மூலப்பொருட்களின் விலை குறைந்து, மசாலா பொருட்களும் கிலோவுக்கு 10 முதல் 15 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது, என்றார்.

காய்கறி விலை நிலவரம்: வடக்கு உழவர் சந்தை நிர்வாக அதிகாரி ராமலிங்கம் கூறியதாவது: வடக்கு உழவர் சந்தையில் கடந்தாண்டு ஜூனில் குளிர் சாதன வசதி செய்யப்பட்டது. இதுவரை 18 லட்சம் மதிப்பில், 1.16 லட்சம் கிலோ காய்கறிகள் இருப்பு வைக்கப்பட்டன. குளிர் சாதன வசதி மூலம் 2,094 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். கத்தரிக்காய் ஒரு கிலோ 16 ரூபாய்; தக்காளி 5; வெண்டை 14; புடலை 12; பாகல் 15; பீர்க்கன்காய் 20; சுரைக்காய் 6; பூசணி 6; கொத்தவரை 13; பச்சை மிளகாய் குண்டு 25, சம்பா 18; அவரை 20; முள்ளங்கி வெள்ளை 10, சிவப்பு 12; தேங்காய் 10; வாழைக்காய் 18; கீரை வகைகள் 15; கொத்தமல்லி 20; கறிவேப்பிலை 30; வெங் காயம் பெரியது 14, சிறியது 13; உருளை 14 ரூபாய் என விற்கிறது. கேரட் கிலோ 28 ரூபாய்; பீன்ஸ் 25; சேனை 18; முருங்கை 15; கோஸ் 10; காலிபிளவர் 12; இஞ்சி 56; பூண்டு 90; பச்சை பூண்டு 45; எலுமிச்சை 60; புளி 40; பொரியல் தட்டை 14; மரவள்ளி ஏழு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தக் காளி வரத்து அதிகமாக இருப்ப தால், விலை குறைவாக உள்ளது, என்றார்.

மல்லிகை விலை ஒரே நாளில் ரூ.80 சரிவு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறியதாவது: உகாதி பண்டிகையை முன் னிட்டு, பூக்களின் விலை நேற்று முன்தினம் அதிகரித்திருந்தது. நேற்று முன்தினம், ஒரு கிலோ மல் லிகை பூ 130 ரூபாய்க்கு விற்பனை யானது; இன்று (நேற்று) கிலோ வுக்கு 80 ரூபாய் குறைந்து 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அரளி, சம்பங்கி பூக்கள் வரத்து குறைந்துள்ளதால், விலை இறக் கம் ஏற்படவில்லை. முல்லை பூ சீசன் ஆரம்பித்து, விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. ஒரு கிலோ அரளி 70 ரூபாய்; சம்பங்கி 80; கனகாம்பரம் 100; பட்டுப்பூ 40; செவ்வந்தி 70; ஜாதி முல்லை 240; முல்லை 240; ரோஸ் ஒன்று ஒரு ரூபாய்; தாமரை பூ வரத்து குறைவாகி 10 ரூபாய்; மாலை பெரியது 120, சிறியது 40 ரூபாய் என விற்கிறது. முகூர்த்த நாட்கள் நெருங்கினால் மட்டுமே விலை ஏறுவதற்கான வாய்ப்பு உள்ளது, என்றார்.

**காய்ந்து வரும் தென்னைகள் சிறு விவசாயிகள் தவிப்பு**

பல்லடம்: பல்லடம் பகுதியில் கடும் வெயிலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல், பி.ஏ.பி., பாசன வசதி இல்லாத பகுதிகளில் தென்னைகள் காய்ந்து வருகின்றன. அழிவில் இருந்து தென்னையை காப்பாற்ற சொட்டு நீர் பாசனம் அமைக்கத் துவங்கி

உள்ளனர் விவசாயிகள்.  பல்லடம், சுல்தான் பேட்டை மற்றும் குண்டடம் வட்டாரங்களில் பணப் பயிரான தென்னை விவசாயம் கடந்த 50 ஆண்டுகளாக பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. இப் பகுதிகளில் மட்டும் 10 லட்சத்துக்கும்

அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. இம்மரங்களில் இருந்து பறிக்கப்படும் தேங்காய் மற்றும் இளநீர், திருப்பூர், கோவை, மதுரை, தூத்துக் குடி போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இதுதவிர, கொப்பரைகளாக உற்பத்தி செய்து அரசு கொள்முதல் மையங் கள், காங்கயம், வெள்ளக் கோவில் வெளிமார்க்கெட் பகுதிகளுக்கு விற் பனைக்கு அனுப்பப்படுகின்றன. பல்லடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் கடந்த மூன்று ஆண்டுகளாகவே போதிய அளவு மழை வளம் இல்லை. இதன் காரணமாக, புதிதாக தென்னை பயிரிட விவசாயிகள் கடந்த மூன்றாண்டுகளாகவே பெரிய அளவில் முன்வரவில்லை. இருப்பினும் பி.ஏ.பி., தண்ணீர் வசதி, போர் தண் ணீர் வசதி கொண்ட விவசாயிகள் ஐந்தாண்டுக்குள் காய்ப்புக்கு வரும் ஒட்டுரக தென்னைகளை புதிதாக பயிரிட்டு வருகின்றனர். தற்போது, பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் பி.ஏ.பி., தண்ணீர் வசதி இல்லாத பல இடங்களில் தென்னைகள் கடும் வெயிலுக்கும், தொடர் வறட்சிக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் காயத் துவங்கியுள்ளன. ஓரளவு வசதியுள்ள சில தென்னை விவசாயிகள், தென்னைகளை அழிவில் இருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் சொட்டு நீர் பாசனம் அமைத்து ருகின்றனர்.

வசதி குறைந்த சிறு விவசாயிகள், தென்னைகள் காய்ந்து வருவதை தடுக்க முடியாமல் தவித்து வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு இடுபொருள் வினியோகம்**

திருப்பூர்: திருப்பூர் தோட்டக் கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு, தக்காளி, வெங் காயம் உள்ளிட்ட பயிர் செய்வதற்கு இடுபொருள் வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறை அதிகாரி கூறியதாவது: தோட்டக்கலைத்துறையின் நீர்வள நிலவள திட்டத்தில், விவசாயிகளுக்கு இடுபொருள் அளிக் கப்படுகிறது. தக்காளி, வெண்டை, வெங்காயம், பீட்ரூட் பயிர்களுக்கான விதை, உரம் என, பயிர் செய்வதற்கான இடுபொருள்கள் தரப்பட்டன.

தக்காளி 10 ஹெக்டேர்; பீட்ரூட் 5; வெண்டை 5; வெங்காயம் 10 ஹெக்டேர் அளவுக்கான இடுபொருள் அளிக்கப்படுகிறது. இத் திட்டம் மூலம் 60 விவசாயிகள் பயன்பெறுவர். தற்போது, வெங்காய இடுபொருள் மட்டும் மீதம் உள்ளது; ஓரிரு நாட்களில் வெங்காய இடுபொருளும் முடிந்துவிடும், என்றார்.

**இந்திய இயற்கை உரங்களில் கண் வைத்துள்ளது சீனா**

*மார்ச்* 17,2010,00:00 IST

பெங்களூரு:மென்பொருள்கள், பட்டு மற்றும் இரும்புத்தாது ஆகியவற்றை தொடர்ந்து, இந்தியாவில் இருந்து இயற்கை உரங்களை இறக்குமதி செய்வதில் சீனா அதிக ஆர்வம் காட்டுகிறது.கர்நாடக மாநிலம், பெங்களூரை மையமாக கொண்டு செயல்படும், மல்டிபிளக்ஸ் பயோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இந்தியாவில் இருந்து சீனாவிற்கு 200 டன் அளவிலான இயற்கை உரங்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த இயற்கை உரங்கள், தென்னை நார், மண்புழு உரம் ஆகியவற்றால் தயாரிக்கப் பட்டவை.சீனா தன் நாட்டின் செழுமை, மண்ணின் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி, விவசாய உற்பத்தியை பெருக்க திட்டமிட்டுள்ளது. இயற்கை உரங்கள் மண்ணின் தரத்தை மேம்படுத்த உதவுவதாக உயிரியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.எனவே, சீனா, தன் நாட்டு மண்ணின் தரத்தை மேம்படுத்த இந்தியாவில் தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை பெற விரும்புகிறது.

இதுகுறித்து, மல்டிபிளக்ஸ் பயோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் டாக்டர் டி.பி.ஷெட்டி கூறுகையில், "இந்தியாவில் இருந்து இயற்கை உரங்களை பெற சீனா ஆர்வமாக உள்ளது. எங்கள் நிறுவனம், 200 டன் அளவிலான இயற்கை உரத்தை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. சீனா, உரங்களின் விலை தொடர்பாக பேரம் பேசினாலும், அங்கு நல்ல சந்தை வாய்ப்புகள் உள்ளன' என்றார்.

தாவரங்களுக்கு ஊட்டமளிப்பதில் முக்கிய பங்கு வகிப்பவை, இயற்கை உரங்கள். இயற்கை உரங்கள் தயாரிப்பதற்கான முக்கிய பொருட்கள் தென்னை நார், மண்புழுக்கள், வேப்பங்கொட்டை ஆகியவற்றை கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

**நவீன தொழில்நுட்பம் - இயற்கைமுறை 'செலரி' சாகுபடி**

*மார்ச் 17,2010,01:16 IST*

ஊட்டி (ஏ.ஜி.3) உள்ளூர் ரகம். சராசரியாக 72.3 செ.மீ. உயரம் வளரக்கூடியது. குறுகிய கால பயிர். வயது 115 நாட்கள். மகசூல் 30.5 டன்/எக்டர். விதை மகசூல் 1.40 டன்/எக்டர். விதைகள் சிறியது. பழுப்பு நிறம். நல்ல நறுமணம் கொண்டதால் மணமூட்டும் பொருளாக பயன்படுகிறது. இலைகள் அதிக வைப்புத்திறன் கொண்டது. புரதச்சத்து1 சதம், மாவுச்சத்து 0.3 சதம், சோடியம் 0.88 சதம், கால்சியம் 4 சதம், இரும்புச்சத்து 1 சதம், இலைகளில் உள்ளது. இதிலிருந்து உடனடி சூப், உடனடி மசாலா பொடி, குழம்பு, சென்னா மசாலா மற்றும் வெஜிடபிள் குருமா தயார் செய்யலாம்.

வருடம் முழுவதும் நீர்போகம் (பிப்ரவரி - ஏப்ரல்), கார்போகம் (ஏப்ரல்- ஜூன்) மற்றும் கடைபோகம் (ஆகஸ்ட் - அக்டோபர்) சாகுபடி செய்யலாம். நல்ல வடிகால் வசதியுள்ள மண்வளம் மிகவும் ஏற்றது. கார அமில நிலை 6 முதல் 6.5 வரை உள்ள வளமான செம்பொறை மண் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. கடல் மட்டத்திலிருந்து 900 மீட்டர் உயரம் கொண்ட எல்லா மலைப்பிரதேசங்களிலும் பயிர் செய்யலாம். செலரி விதைகள் மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது.

ஒரு எக்டருக்கு 1.25கி.கிராம் விதை தேவை. 100 சதுர அடி நாற்றங்கால் அவசியம். 1 மீட்டர் அகலம், 15 செ.மீ. உயரம், தேவைக்கேற்ற நீளம் கொண்ட மேட்டுப்பாத்திகள் அமைத்து விதைகளை 3 சதம் பஞ்சகவ்யா கரைசலில் ஊறவைத்தபின் நிழலில் உலர்த்தி, வரிசையில் விதைக்க வேண்டும்.

நாற்றங்கால் நிலம் தயாரிக்கும்போது 1 சதுர மீட்டருக்கு 20 கி.கி. தொழு உரம், அதனுடன் 5 கி.கிராம் மண்புழு உரம், 10 கிலோ கிராம் இயற்கை உயிராற்றல் மட்டு உரம், 200 கிராம் மைக்கோரைசா உட் பூசணம், 200 கிராம் அசோஸ்பைரில்லம், 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை கலந்து இடவேண்டும். நாற்றங்காலில் களைகளை நீக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். விதைத்த 3 வாரங்களில் விதை முளைத்துவிடும். 75 நாட்களில் நல்ல தரமான நாற்றுக்களை பெறலாம். நடவு நிலம் தயாரிக்க எக்டருக்கு 50 டன் நன்கு மக்கிய தொழு உரம், 5 டன் இயற்கை உயிராற்றல் மட்கு, 5 டன் மண்புழு உரம், 10 கி.கி. மெட்டாரைசியம், 10 கி.கி. மைக்காரைசா வேர் உட்பூசனம், 1.25 டன் வேப்பம் புண்ணாக்கு, 2.5 கி.கி. சூடோமோனாஸ் புளூரசன்ஸ் மற்றும் 2.5 கி.கி டிரைக்கோடெர்மா விரிடி ஆகியவற்றையும் கலந்து இடவேண்டும். நிலத்தை நன்கு உழுது பின்பு 75 கிராம் கொம்புசாண உரத்தையும் 1.5 கி.கி. சாண மூலிகை உரத்தையும் 40 லிட்டர் தண்ணீரில் கரைத்து பெரிய துளிகளாக விழுமாறு ஒரு எக்டர் நிலத்தில் தெளிக்க வேண்டும்.

**நடவு:** நல்ல தரமான நாற்றுக்களை வரிசைக்கு வரிசை 45 செ.மீ. மற்றும் செடிக்கு செடி 15 செ.மீ. இடைவெளியில் மழை காலங்களில் நடவு செய்ய வேண்டும். வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். 3-4 முறை களைநீக்கம் அவசியம்.

**வளர்ச்சி ஊக்கிகள்:** பஞ்சகவ்யா 3 சத கரைசலை இலைத்தெளிப்பானாக 15 நாட்கள் இடைவெளியில் 4 முறை தெளிக்க வேண்டும். அறுவடைக்கு முன் 10 சத மண்புழு உர நீரை 4 முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். கொம்பு சிலிகா உரம் 2.5 கிராமை 50 லிட்டர் தண்ணீரில் கரைத்து அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன் தெளிக்க வேண்டும்.

சாண மூலிகை உரம் 5 கிலோ / 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 3 முறை தெளிக்க வேண்டும். அறுவடைக்கு முன் 3 சதம் தசகவ்யா கரைசலை இலைவழி தெளிப்பாக 15 நாட்கள் இடைவெளியில் 4 முறை தெளிக்க வேண்டும். 200 கிராம் அக்னிஹோட்ரா சாம்பலை ஒருலிட்டர் கோமியத்தில் கலந்து 3 முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். 5 சதம் மஞ்சூரியன் தேனீர் கரைசலை 3 முறை தெளிக்க வேண்டும்.

**அறுவடை:** 115வது நாள் செலரி அறுவடைக்கு தயாராகிறது. வெளிப்புறம் உள்ள தடிமனான தண்டுகள் சூப் செய்யவும், உட்புறம் உள்ள இளம் தண்டுகள் சாலட் செய்யவும் பயன்படுத்தலாம்.

(தகவல்: ந.செல்வராஜ், க.வி.ராஜலிங்கம், க.ராமமூர்த்தி, வணிக தோட்டக்கலை நிலையம், ஊட்டி-643 001.

**வீட்டு காய்கறி தோட்டம்**
*மார்ச்* 17,2010,01:15 IST

முதலில் கொஞ்சம் வெயில் அதிகம் படும் இடமாக தேர்வு செய்யுங்கள். எந்த வகை மண் நல்லது? களிமண் இல்லாத பட்சத்தில் ஓ.கே. மண் கட்டிகள் இல்லாமல் சமன் செய்து கொள்ளவும். சிறந்த வடிகால் வசதி தேவை.

உங்கள் தோட்டத்தை நீங்களே டிசைன் செய்யலாம். ஒரு சிறிய இடத்தில் ""நாற்றங்கால்'' என குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இந்த நாற்றங்காலில்தான் வெண்டை, மிளகாய், கத்தரி, தக்காளி எல்லாம் தன் முதல் 15 நாட்களை கழிக்கப் போகின்றன. இதுதான் உங்கள் காய்கறி பயிரின் குழந்தை பருவம். நாற்றங்காலில் விதைகள் முளைத்து இலைகள் பரப்பி ஒரு 10 செ.மீ. வளர்ந்தபின் சிறிய இடைவெளி விட்டு பிடுங்கி நட்டுவிடலாம். ஒவ்வொரு காய்கறிக்கும் நடும் இடைவெளி வித்தியாசப்படும். வீட்டு தோட்டம் என்பதால் இடைவெளியை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக கீரை என்று எடுத்துக்கொள்வோம். நாற்றங்கால் பெரிதாக தேவையில்லை. 25 முதல் 30 நாளில் வீட்டு தோட்டத்தில் கீரை ரெடி. கீரை விதைகளை விதைக்கும்போது கவனம் தேவை. எறும்புகள் தொல்லை தரும். அடியுரமாக நன்கு மக்கிய கம்போஸ்ட் உரங்களை (இயற்கை உரம்) இடுங்கள். தேவைப்பட்டால் கடலை புண்ணாக்கு + வேப்பம் புண்ணாக்கு கலந்து இடலாம். உங்களுக்கு எந்த கீரை வகை பிடிக்கிறதோ அதை நீங்கள் வீட்டு தோட்டத்தில் நடலாம்.

வெண்டை, கத்தரி, மிளகாய், தக்காளி இவை பொதுவாக ஒரே வயதுடைய காய்கறி பயிர். இடைவெளி விட்டு நட்டு பயன்பெறலாம். இவைகள் 45 முதல் 120 நாள் வரை காய்கள் தரும். பூச்சி தொல்லை இருப்பின் வேப்ப எண்ணெய் தெளிக்கலாம். ரசாயன உரங்களையும் பூச்சி மருந்துகளையும் தவிர்ப்பது நல்லது. காய்கறி விதைகளை கடைகளில் விசாரித்து வாங்குங்கள். காய்கறி செடிகளை வளர்ப்பதற்காக தற்போது கன்டெய்னர்கள் உள்ளன. அவற்றை பயன்படுத்தலாம்.

புடலங்காய், பாகற்காய் இவையெல்லாம் படரும் தாவரம். எனவே படர்வதற்கு பந்தல் தேவை. கம்பு மற்றும் ஸ்டீல் கொண்டு நீங்கள் பந்தல் அமைக்கலாம். உங்கள் வீட்டின் வசதியை பொறுத்து படரும் தாவர காய்கறி வகைகளை

நீங்கள் தேர்வு செய்யலாம். பழைய சாக்கு, உபயோகமற்ற டிரம் இவற்றில் மண் நிரப்பி நீங்கள் வாழை, பப்பாளி வளர்க்கலாம். ஏன் மாமரம், கொய்யா கூட வளர்க்கலாம்.

உங்கள் வீட்டு மண் பொலபொல தன்மைஉடையதா?, சேனைகிழங்கு வளர்ப்பது நல்லது. உங்களுக்கு தேவையான உரத்தை நீங்களே தயார் செய்து கொள்ளலாம். எப்படி என கேட்கிறீர்களா? வீட்டின் பின்புறத்தில் ஒரு சிறிய குழி (30 செ.மீ. ஆழத்தில்) எடுத்து தினமும் வீட்டில் கிடைக்கும் குப்பைகளை அதில் கொட்டுங்கள். 90-120 நாளில் நன்கு மக்கிய இயற்கை உரம் தயார். உங்கள் வீட்டு தோட்டத்தில் வளரும் காய்கறிகள் இயற்கையானதும், விஷமற்றதும் என்பது மட்டுமல்லாமல் உங்கள் காய்கறி தோட்டம் உங்களுக்கு ஒரு உடற்பயிற்சிகூடம் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.-எம்.ஏ.கபீர், பி.எஸ்சி (அக்ரி), எம்.பி.ஏ., வேளாண்மை ஆலோசகர், தாராபுரம், 95004 48077.

**ஒப்பந்த முறையில் பால்காளான் வளர்ப்பு:**

மார்ச் 17,2010,01:15 IST



பி.டெக்., படித்த ஒரு பெண்மணி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மனிதகுலத்திற்கு இயற்கை கொடுத்த நஞ்சில்லா உணவாகிய காளானின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், நாடு முழுவதும் பால்காளான் உற்பத்தியினை ஒப்பந்த அடிப்படையில் உற்பத்தி செய்யவும் "டெய்லி மஷ்ரூம்' நிறுவனத்தின் நிர்வாகி சுமித்ரா காளான் முக்கியத்துவம் பற்றியும் ஒப்பந்த அடிப்படையில் காளான் உற்பத்தி பற்றியும் தேவையான மூலப்பொருட்கள் பற்றியும் எவ்வாறு பதப்படுத்துவது, குறைந்தது தினசரி 50 கிலோ காளான் உற்பத்தி செய்யும் வகையில் ஒப்பந்ததாரர் களுக்கு காளான் வளர்ப்பு குடில் மட்டும் அமைத்தால் போதும்.

மற்ற அனைத்தும் செய்து ஒப்பந்தகாரர் எந்த பகுதியில் இருந்தாலும் அவர்கள் உற்பத்தி செய்யும் காளானை அவர்களே பணம் கொடுத்து எடுத்துக் கொள்வார்கள். மேலும் விபரங்களுக்கு ""சுமித்ரா, பி.டெக்., டெய்லி மஷ்ரூம்ஸ், 64, ஐஐ, பாப்பாதிக்காடு, ஜானகி நிவாஸ், ஈரோடு-638 004, 90955 55677.

**எட்டடி உயர அதிசய வாழைத்தார்**

*மார்ச்* 17,2010,01:14 IST



உதயம் ரகம்: திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம் உதயம் என்ற புதிய வாழை ரகத்தை கண்டுபிடித்துள்ளது. இது கற்பூரவல்லி ரகத்தைப்போன்று இருக்கும். இப் புதிய ரகம் தாவரத் தேர்வு முறையில் உருவாக்கப்பட்டது. இதன் சிறப்பு அம்சங்கள் யாதெனில், சராசரி தாரின் எடை 37 கிலோ, அதிக பட்ச தாரின் எடை 45 கிலோ. இதன் வயது 13 மாதங்கள். மென்�யான புளிப்பும், இனிப்பும் கொண்ட சுவை. நீண்ட நேரான பழங்கள்.

**விஸ்தரிப்பு பணி:** தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம் உதயம் ரகத்தைப் பிரபலப்படுத்த கருத்தரங்குகளை நடத்தியது. அந்த கருத்தரங்குகளுக்கு வந்த விவசாயிகளுக்கு ஒவ்வொருவருக்கும் திசு வளர்ப்புக் கன்றுகளை நிலையம் இலவசமாகக் கொடுத்துள்ளது. இம்மாதிரியாக இலவசமாக கொடுக்கப்பட்ட விவசாயிகளில் திருக்காட்டுப்பள்ளி சுந்தரமும் அடங்குவார்.

சுந்தரம் திசு வளர்ப்புக்கன்றுகளை பெற்ற தேதி 21.8.2008 ஆகும். அவர் இக்கன்றினை தன் வாழைத் தோட்டத்தில் ஒரு வாரம் வைத்து கடினப்படுத்தி வழக்கம்போல் வாழைக் கன்றுகள் நடுவதுபோல் நட்டார். கன்றுகளை ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி நட்டார். நட்ட பிறகு வயலில் உடனே பசுந்தாள் உரச்செடி சணப்பினை விதைத்துவிட்டு அவைகள் நன்கு வளர்ந்தபின் தோட்டத்தில் மடக்கி உழுதார். வாழைத்தோட்டங்களில் வாழைக்கு வழக்கம்போல் செய்யும் செய்நேர்த்திகளை முறையாக செய்தார். பொதுவாக வாழைக்கு உரமிடுவதுபோல் தனது வாழைக்கு நட்ட மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது மாதங்களில் உரம் இட்டார். மரங்கள் செழிப்பாக வளர்ந்தன. மரத்தில் பூ ஒடித்தவுடன் ஒரு தடவையும் பின் 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு தடவையும் பொட்டாசியம் சல்பேட் 15 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளித்தார்.

21.12.2009 அன்று தோட்டத்தில் தாரினை அறுவடை செய்தார். இந்த தார் இதுவரை விவசாயிகள் பார்த்திராத அளவிற்கு மிகப்பெரியதாக இருந்தது. ஊர் விவசாயிகள் திரண்டு வந்துதாரினை அதிசயமாகப் பார்த்தனர். இந்த அதிசய வாழையில் 29 சீப்புகளும், 600 காய்களும் இருந்தன. தாரின் உயரம் 8 அடி இருந்தது. 8 அடி உயரமுள்ள தாரினை மகாராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த பல விவசாயிகள் நேரில் வந்து பார்த்தார்கள்.

இது விஷயம் தெரிந்த திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் 24.12.09 அன்று தாரினை நேரில் பார்வையிட்டனர். வந்திருந்த விஞ்ஞானிகள் யாரென்றால் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் எம்.எம்.முஸ்தபா, இனப்பெருக்க மூத்த விஞ்ஞானி எஸ்.உமா, பூச்சியியல் முதுநிலை விஞ்ஞானி பீ.பத்மநாபன், தோட்டக் கலை முதுநிலை விஞ்ஞானி பீ.குமார் ஆகியோர். அனைத்து விஞ்ஞானிகளும் சுந்தரத்தை பாராட்டினர். விஞ்ஞானிகள் தாரினை ஆய்வு செய்தபோது தாரிலிருந்த சீப்புகள் 29, தாரின் எடை 69 கிலோ, தாரில் இருந்த பழங்கள் 600. இந்த தாரிலிருந்து தேவையான திசு எடுத்து திசு வளர்ப்பு முறையில் கன்றுகளை புதிதாக உருவாக்க ஆவன செய்வதாக விஞ்ஞானிகள் கூறினார்கள். மேலும் பக்க கன்றுகளை தேர்வு செய்து ஆராய்ச்சி செய்யவும் விஞ்ஞானிகள் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றனர்.

**விவசாயிக்குபாராட்டு:** வாழை சாகுபடியில் தமிழ்நாட்டில் இதுவரை கண்டிராத அளவிற்கு அதாவது 8 அடி உயரத்திற்கு உள்ள வாழைத்தாரினை முதன் முதலில் விவசாயி நிலத்தில் கண்ட விஞ்ஞானிகள் திருக்காட்டுப்பள்ளியில் உள்ள மிகப்பிரசித்தி பெற்ற ஒரு பள்ளியில் சுந்தரத்திற்கு பாராட்டுவிழா நடத்தினர். விஞ்ஞானிகள் சுந்தரத்தை மட்டும் பாராட்டுவதோடு நின்றுவிடாமல் அவரது துணைவியாரையும் பாராட்டினர்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**சின்ன சின்ன செய்திகள்**

மார்ச் 17,2010,01:17 IST

விறகு மரங்கள்: தமிழகத்தில் தினமும் 500 லாரிகள் விறகு எரிக்கப்படுகிறது. ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களில் சீமைக்கருவேல் மரம் தினசரி 1000 டன் விறகை சுட்டு 350 டன் அடுப்புக்கரி தயாரிக்கப்படுகிறது. விறகு மரங்களின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு ஏற்ற வகை மரங்கள்:

மிகுந்த வறட்சியான பகுதிகளுக்கு ஏற்ற மரங்கள்: சீமைக்கருவேல், இஸ்ரேலிய கருவேல், வன்னி, சிசு

சுமாரான வறட்சியான பகுதிகளுக்கு - சூபாபுல், மாஞ்சியம், மஞ்சள் கொன்னை, வாகை, குமுள். வறட்சியிலும் வளரும், நீர் தேங்கினாலும் தாக்குப்பிடிக்கும் மரங்கள்: கருவேல், யூகலிப்டஸ்.

மணற்சாரி கடலோர மண், உவர் நிலங்கள், உப்பு தண்ணீர் பாயுமிடங்கள் - மலைப்பூவரசு, கொடுக்காப்புளி, வாதாங்கொட்டைஆழமான மண் கண்டம் மற்றும் ஈரப்பதம் அவசியம் - புளி, மலைவேம்பு (மீலியா அசாடிரக்), சவுக்கு, மலைச்சவுக்கு (சில்வர் ஓக்)

மரங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் கன்றுகளுக்கு தொடர்பு முகவரி: மர இனப்பெருக்க மையம், ஆர்.எஸ்.புரம், கோவை-641 002, 0422-248 4113.

மரவிதைகள், கன்றுகள் தேவைக்கு - ஒடுக்கம் திட்டம், ரெட்டியபட்டி, நத்தம் ரோடு, திண்டுக்கல். விதைகளுக்கு: நாகராஜ், 99424 81429, கன்றுகளுக்கு: நாகமுத்து, 98650 60673. விறகு அடுப்புக்கு: ஆர்.கே.விஜயராகவன், பி.இ., தெர்மல் எனர்ஜி, மதுரை-98430 11102. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**தேயிலை செடி மறு நடவு செய்ய வழங்கப்படும் தொகை அதிகரிப்பு தென் மண்டல செயல் இயக்குனர் தகவல்**

*குன்னூர், மார்ச்.17–*

*தேயிலை செடி மறு நடவு செய்ய வழங்கப்படும் தொகை அதிகரிக்கப் பட்டு உள்ளது என்று தென்மண்டல செயல் இயக்குனர் ஆர்.டி.நசீம் கூறினார்.*

*கண்காட்சி*

*தேயிலை வாரியம் உபாசி வேளாண்மை அறிவியல் மையம் சார்பில் தொழில் நுட்ப வாரத்தை முன்னிட்டு விவசாயிகளின் விழா நடை பெற்றது. விழாவில் தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் ஆர்.டி.நசீம் கலந்து கொண்டு கண் காட்சியை திறந்து வைத்தார். அப்போது அவர் பேசிய தாவது:–*

*தேயிலையின் விலை வீழ்ச்சிக்கு தரமற்ற தேயிலையே காரணமாக இருந்தது. பச்சை தேயிலையை சிறு விவசாயிகள் கத்தி கொண்டு அறுத்து எடுத்தனர். இதனால் தரமற்ற பச்சை தேயிலை அறுவடை செய்யப்படுவதோடு, தேயிலை செடியின் மகசூலும் குறை வடையும் நிலை ஏற்படு கிறது.*

*தரம் உயர்வு*

*கத்தி போட்டு இலை எடுப்பது நீலகிரி மாவட்டத் தில் தான் உள்ளது. தேயிலை யின் தரத்தை பராமரிக்க கையினால் பச்சை தேயிலையை குறித்த காலத்தில் பறிக்க வேண்டும். பச்சை தேயிலைக்கு கடந்த 2 வருடங்களாக 15 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது.*

*இந்த விலை உயர்வுக்கு தேயிலையின் தரம் உயர்ந்து இருந்தாலும், தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளான கென்யா, இலங்கை ஆகிய நாடுகளில் வறட்சி நிலவியதே காரணம் ஆகும். அந்த நாடுகளில் தேயிலை இல்லாததால் உலக நாடுகள் இந்திய தேயிலையை வாங்கின. தற்போது இந்த நாடுகளில் வறட்சி நீங்கி, தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. வறட்சிக்கு பின்னர் தேயிலை மகசூல் அதிகரிக்கும்.*

*கலப்படம் இல்லை*

*அசாம் போன்ற வட நாடு களிலும் தேயிலையின் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே தற்போது தேயிலையின் விலை ஏல மையத்தில் குறைந்து வருகிறது. தரமான பச்சை தேயிலையின் மூலம் தேயிலை தயாரித்தால் தான் தேயிலையின் விலையை தக்க வைத்து கொள்ள முடியும். நீலகிரி தேயிலை கலப்படமாக இல்லை. மோச மான*

பச்சை தேயிலையை கொண்டு, தேயிலை தயாரிப்பதால் தான் தரமற்று உள்ளது. கடந்த வாரம் 200 இடங்களில் கலப்பட தேயிலை தூள் உள்ளதா? என ஆய்வு நடத்தி உள்ளோம்.

தொகை அதிகரிப்பு

தேயிலை செடி மறு நடவு செய்ய ஒரு ஏக்ராவிற்கு 35 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட் டது. இதனை அதிகரித்து தர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதன்படி 50 ஆயிரம் ரூபாய் ஒரு ஏக்ராவுக்கு மறுநடவு செய்ய வழங்கப்பட உள்ளது.

மேற்கண்டவாறு அவர் பேசினார்.

**நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு உயர் ரக கார்னேசன் மலர் நாற்றுகள் வழங்க முடிவு**

ஊட்டி, மார்ச்.17–

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு உயர் ரக கார்னேசன் கொய் மலர் நாற்றுக்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கொய்மலர் உற்பத்தி சங்க நிர்வாகி சாடிசேர் கூறி உள்ளார்.

குளிர் பிரதேசம்

நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக உள்ளதால் இந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பசுமை குடில்கள் அமைத்து கொய்மலர்கள் உற்பத்தி செய்கின்றனர். இங்கு மலர் பொக்கைகள் செய்வதற்கு மிகவும் அழகான பூக்கள் உள்ளன. இதனால்வெளிநாட்டு சந்தையில் நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கார்னேசன் மலர்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

சில விவசாயிகள் தரமற்ற கார்னேசன் விதைளை பயிடுவதால் பெரும் நஷ்டத்தை சந்திக்கின்றனர். எனவே விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் இந்த கார்னேசன் மலரை அதிகளவில்உற்பத்தி செய்ய வெளிநாட்டில் இருந்து உயர்ரக நாற்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

பயிற்சி

இது தொடர்பாக நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த கொய்மலர் விவசாயிகளுக்கு, கொய்மலர் உற்பத்தி குறித்த பயிற்சி ஊட்டி நகார் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது. இதற்கு ஸ்பெயின் நாட்டின் கொய்மலர் நாற்று உற்பத்தி சங்கத்தின் இந்தியாவிற்கான நிர்வாகி சாடிசேர் தலைமை தாங்கினார். அதன் பிறகு சாடிசேர் நிருபர்களிடம் கூறியதாவது:–

உலக அளவில் கொய் மலருக்கு நல்ல வரவேற்பு உள்ளது. நீலகிரி மாவட்ட சீதோஷ்ணத்தில் தரமான உயர்ரக கார்னேசன் மலர்களை அதிகளவில் உற்பத்தி செய்ய முடியும். தற்போது சில கார்னேசன் மலர்கள் தரம் குறைந்து உள்ளது.

நடவடிக்கை

தற்போது ஸ்பெயின் நாட்டில் காணப்படும் கார்னேசன் உயர்ரக நாற்றுக்கள் பூனேவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு வழங்குகிறோம். அந்த நிறுவனத்தின் மூலம் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு உயர் ரக கார்னேசன் நாற்றுக்கள் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கார்னேசன் கொய்மலரில் டோவர், பிங்டோவர், கிரோ பல்டிகோ, துமாஸ் பூரியாஸ் போன்ற உயர்ரக நாற்றுக்கள் உள்ளன. இந்த ரக மலர் சாகுபடி செய்தால் அதிக மகசூல் கிடைப்பதோடு, மற்ற மலர்களை விட அதிக விலையும் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.